**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**

OS No: 86/2022

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**வாசா2 (கந்தசாமி) நாள் 28.01.2026**

**குறுக்கு விசாரணை (2,3 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி மணியும் நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகளும் எங்கள் ஊரை சேர்ந்தர்கள் என்றால் சரிதான். பழனாள் (எ) பழனியம்மாள் அவரது இறுதி காலத்தில் 3ம் பிரதிவாதியுடன் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல, அவர் தனியாக தான் இருந்தார். அவரது மக்களிடையே அவருக்கு போக்குவரத்து இருந்தது. பழனாள் (எ) பழனியம்மாள் இறந்த பின் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், குடும்ப செலவு மற்றும் கட்டிட செலவுக்காக பணம் வாங்கப்பட்டது என சொல்லியுள்ளேன், ஆனால் அது என்ன செலவு என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பழனாள் (எ) பழனியம்மாளுக்கு கல்வி அறிவு இல்லை என்றும் அதனால் கடனுறுதி சீட்டு அவர் வாங்கி வந்ததாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. பழனாள் (எ) பழனியம்மாளுக்கு கையொப்பம் செய்யத் தெரியாது என்று வழக்கிற்காக கையொப்பம் செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பணம் ரூ.3,50,000/- ஒரே தவணையில் தான் கொடுக்கப்பட்டது. ரூ.3,50,000/- அவர் பெற்றிருந்தால் அவரின் வாரிசுகள் உடன் வந்திருப்பார்கள் என்றும் வழக்கிற்காக அவர் தொகை பெற்றுக் கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பழனாள் (எ) பழனியம்மாளுக்கு எழுத படிக்கத் தெரியாது என்றும், கடனுறுதி சீட்டு மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றும், அதில் நான் சாட்சி கையொப்பமிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.01.28 17:07:10 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS